பக்கங்கள் 15+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 12 செவ்வாய்க்கிழமை 29.10.2024 | அதிர்வு 89

## நாளை ஆரம்பமாகின்றது தபால் மூல வாக்களிப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்புகள் நாளை 30 ஆம் திகதி ஆரம்பமாகின்றது என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# இந்த ஆட்சியை இலகுவில் கவிழ்த்துவிடவே முடியாது!

## களுத்துறை பரப்புரைக் கூட்டத்தில் அநுர சூளுரை



“அறுகம்பே சம்பவத்தை அடிப்படையாக வைத்தேனும் இந்த ஆட்சியைக் கவிழ்க்க முடியுமா என எதிரணிகள் சிந்தித்துக் கொண்டுள்ளன. அவ்வளவு எளிதில் இந்த ஆட்சியைக் கவிழ்த்து விட முடியாது. நாட்டை மீட்டெடுக்கும் வரை எம்மை வீழ்த்த முடியாது.”

- இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார். 02

## சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு இன்று முதல் பலத்த பாதுகாப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ். சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை முதல் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்துக்குத்தாக்குதல் 02

## எனக்கும் அநுரவுக்கும் இடையில் எவ்வித சண்டைகளும் இல்லை!

### போலிகளுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று கூறுகின்றார் பிரதமர் ஹரிணி



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், தனக்கும் இடையில் அரசியல் ரீதியில் மோதல் ஏற்பட்டுள்ளது என்று வெளியாகும் தகவல்கள் போலியானவை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

“போலிகளை உருவாக்குவதிலும், கட்டுக்கதைகளைப் பரப்புவதிலும் சிலர் 02




# பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கை, கால்கள் கட்டப்பட்டுப் படுகொலை!

கேகாலை, கொஸ்ஸின்ன பிரதேசத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் கேகாலை பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் கிஷாந்த புலஸ்தி அவரது வீட்டுக்குள் கை, கால்கள் கட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் கேகாலை, ஹெட்டிமுல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 75 வயதுடையவர் ஆவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, இனங்காணாத நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டவரின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து அவரது கை, கால்களைக் கட்டி வைத்து விட்டு அவரைத் தாக்கிக் கொலை செய்துள்ளார்.

பின்னர், அந்த நபர் கொலை செய்யப்பட்டவரின் மனைவியையும் தாக்கி காயப்படுத்தியுள்ள நிலையில், வீட்டின் அலுமாரியில் இருந்த அனைத்து பொருட்களையும் கலைத்து விட்டு கார் ஒன்றையும் திருடி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

கொலை செய்யப்பட்டவரின் மனைவி சிகிச்சைக்காக கேகாலை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருடப்பட்டதாகக் கூறப்படும் கார் பின்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்துக் கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கேகாலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### எனக்கும் அநுரவுக்கும்...

வல்லவர்கள். இப்படியானவர்கள் தான், எனக்கும், தோழர் அநுரவுக்கும் இடையில் அரசியல் போர் ஏற்பட்டு விட்டதாகக் கூறி வருகின்றனர்.

நாங்கள் தற்போது பேசுவதில்லையாம், விமர்சித்துக் கொள்கின்றோமாம். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரைத் தெரிவு செய்யும்போது, நான் கூறிய நபர் தெரிவு செய்யப்படாததால் எனக்குக் கடும் கோபம் ஏற்பட்டதாம். அநுரவுடன் சண்டை பிடித்தேனாம்.

ஏதோ கூட்டத்தில் இருந்தவர்களைப் போல் கதைகளைக் கூறி வருகின்றனர். இவை போலியான தகவல்கள். இது பற்றி கருத்துக் கூற நான் விரும்பவில்லை. இருந்தாலும் போலிகளுக்கு முடிவு கட்ட வேண்டும். எனக்கும் தோழர் அநுரவுக்கும் இடையில் எவ்வித சண்டையும் இல்லை. போட்டியும் இல்லை." – என்றார்.

### இந்த ஆட்சியை...

அவர் மேலும் உரையாற்றுகையில், "ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்று ஆட்சியமைத்தால் டொலரின் பெறுமதி 400 ரூபா வரை செல்லும் என பிரச்சாரம் செய்தனர். இன்று அவ்வாறு நடந்துள்ளதா? இல்லை.

எமது பிரதிநிதிகள் சர்வதேச நாணய நிதித்துடன் பேச்சு நடத்தி வருகின்றனர். சாதகமான பிரதிபலன் கிட்டியுள்ளது. மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

எமது ஆட்சியில் அஸ்வெசும இல்லாமல் செய்யப்படும் என்றனர். அதுவும் நடக்கவில்லை. அன்று கூறிய அனைத்தும் பொய்யென உறுதியாகியுள்ளது. எனவே, பொய்களை நம்பி எவரேனும் ஏமாந்திருந்தால் அவர்களும் இன்று உண்மையை உணர்ந்திருப்பார்கள்.

எனவே, எமக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை மக்கள் வழங்குவார்கள். இதனால் சிலர் குழம்பிப் போயுள்ளனர். ஏதேனும் சிறு சம்பவம் நடந்தால்கூட ஆட்சி கவிழுமா என எதிர்பார்த்துக்கொண்டுள்ளனர்.

அறுகம்பே சம்பவம் தொடர்பில் அனைவரும் ஊடக சந்திப்புகளை நடத்துகின்றனர். அதன் மூலமாகவேனும் ஆட்சி கவிழுமா என்ற சந்தோசத்தில் அவர்கள் உள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு முன்னரே எமக்குத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து சுற்றுலாத்துறையும் பாதிக்காத வகையில் திட்டமிட்ட அடிப்படையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

சுற்றுலாப் பயணிகளை பாதுகாக்கும் அதேவேளை திட்டமிட்டவர்களையும் கைது செய்வதற்குரிய ஏற்பாடுகள் இடம்பெற்று, தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது." – என்றார்.

### சாவகச்சேரி...

நடத்தப்படப் போவதாகப் பொலிஸாரின் தொலைபேசிக்கு வழங்கப்பட்ட மர்ம நபரின் தகவலுக்கமைய குறித்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனையடுத்து கடும் சோதனைகளுக்குப் பின்னரே நீதிமன்ற நடவடிக்கைகளில் பங்கேற்க பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதேவேளை, கடந்த வாரம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட போவதாகப் பதிவுத் தபாலில் பொலிஸாருக்குத் தகவல் வந்ததையடுத்து மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### நாளை ஆரம்பமாகின்றது...

அதற்கமைய, ஒக்டோபர் 30, நவம்பர் 1 மற்றும் நவம்பர் 4 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்காளர்கள் தமது அலுவலகங்களிலுள்ள உறுதிப்படுத்தல் அதிகாரிகளின் முன்னிலையில் வாக்களிக்க முடியும் என்றும், இந்த 3 தினங்களில் வாக்களிக்க முடியாதவர்கள் எதிர்வரும் நவம்பர் 7 மற்றும் 8 ஆம் திகதிகளில் வாக்களிக்க வாய்ப்பு வழங்கப்படும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# மண்டைதீவில் கடற்படைக்குக் காணி சுவீகரிப்பு: மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்ட நில அளவீடு



யாழ். மண்டைதீவில் கடற்படையினருக்குக் காணி சுவீகரிக்கும் நோக்கில் இன்று நடைபெறவிருந்த நில அளவீடு, தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டுள்ளது.

(படங்கள்:- எஸ்.நிதர்ஷன்)























# ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் வாக்குகளை குறைப்பதற்குத் திருகோணமலையில் சதி!

## வேட்பாளர் இம்ரான் மஹரூப் தெரிவிப்பு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டத்தில் சஜீத் பிரேமதாஸவுக்கு கடந்த ஜனாதிபதி தேர்தலில் அதிகப்படியான வாக்குகளை பெற்றுக்கொடுத்தோம். இதனைக் குறைத்து பிரதிநிதித்துவத்தை குறைக்க பல கட்சிகளும் வேட்பாளர்களும் களமிறக்கப்பட்டுள்ளனர். இதனைப் பாதுகாக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளர் இம்ரான் மஹரூப் தெரிவித்தார்.

கிண்ணியா பெரியாற்று முனை பகுதியில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரை நிகழ்வில் கலந்து கொண்டதன் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

திருகோணமலை மாவட்டத்தில் 30 இற்கும் மேற்பட்ட கட்சிகளும் 200 இற்கும் மேற்பட்ட வேட்பாளர்களும் போட்டியிடுகின்ற சந்தர்ப்பத்தில் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களே தெரிவு செய்யப்படவுள்ளனர்.

பல கிராமங்களில் பல வேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளமையால் மக்கள் மத்தியில் இது பொதுத் தேர்தலா அல்லது உள்ளூராட்சி மன்றத் தேர்தலா எனச் சந்தேகம் எழுந்துள்ளது.

சிறுபான்மை மக்களின் வாக்குகளைச் சிதறடிக்க வைத்து பிரதிநிதித்துவத்தை இழக்க வைக்க வேண்டும் என்ற சதியை நடத்துகிறார்கள். எமது வாக்குகளை சரியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

தற்போதைய அரசின் தவறான கருத்துக்களை ஏற்று தடுமாறுகின்றனர். இது எதிர்காலத்தில் புரியும் உரிமைகளுக்காக, சமூகத்துக்காகக் குரல் கொடுக்கும் ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள் என்பதே எங்களது எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்றது.– என்றார்.

# ஜனாதிபதி நாட்டை பற்றிப் பேசினாலும் மலையக மக்கள் பற்றிக் கதைப்பதில்லை



## வேட்பாளர் ராமேஷ்வரன் தெரிவிப்பு

(க.கிஷாந்தன்)

ஜனாதிபதி நாட்டை பற்றிப் பேசினாலும் மலையக மக்கள் பற்றிக் கதைப்பதில்லை. எங்களது பிரச்சினைகளை நாங்கள் தான் கதைக்க வேண்டும்.

நவம்பர் 14 ஆம் திகதிக்கு பிறகு பல சுயேச்சைக்குழுக்கள் காணாமல் போய்விடும். எனவே, சுயேச்சைக்குழுக்களை நம்பி இருக்கும் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழந்துவிடக்கூடாது.

காங்கிரஸ் உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் இருந்தால்தான் மலையக மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக உரிமைகள் பாதுகாக்கப்படும். அவர்களுக்காக குரல் எழுப்பப்படும் என்று இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற தேர்தல் வேட்பாளருமான மருதபாண்டி ராமேஸ்வரன் தெரிவித்தார்.

பூண்டுலோயா, கைப்புகலை உள்ளிட்ட பகுதிகளில் இன்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இது தேர்தல் காலம். இலங்கை ஜனநாயக நாடு என்பதால் தேர்தலில் எவரும் போட்டியிடலாம். அதற்குரிய உரிமை அவர்களுக்கு இருக்கின்றது. அதேபோல மக்களுடன் இருக்கும், மக்களுக்கு சேவையாற்றக் கூடிய வேட்பாளர்களை தெரிவுசெய்ய வேண்டியது மக்களின் கடமையாகும். போலி பிரசாரங்கள்மூலம் மக்களின் மனங்களை மாற்றுவதற்கு சிலர் முற்படலாம். அவ்வாறான சூழ்ச்சிகளை இனங்கண்டு, தமது பிரதிநிதித்துவத்தை பாதுகாக்கும் வகையில் மக்கள் வாக்களிக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியில் நாம் ஒரு வருடம் அங்கம் வகித்தோம். குறுகிய காலப் பகுதிக்குள் மலையக பெருந்தோட்டப் பகுதிகளுக்கு பல அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. கல்வித்துறை மேம்பாட்டுக்கு முன்னுரிமை வழங்கி இருந்தோம். செய்த சேவைகளை முன்வைத்தே நாம் மக்கள் முன்னிலையில் வாக்கு கேட்கின்றோம். ஆனால் காங்கிரஸ் எதையும் செய்யவில்லை என பொய் சொல்லி சிலர் வாக்கு கேட்கின்றனர். காங்கிரஸை விமர்சித்தால் மட்டுமே அவர்களால் அரசியல் செய்ய முடியும்.

காங்கிரஸ் சமூக நலன் கருதியே செயற்பட்டு வருகின்றது. நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்பது மிக முக்கியம். எல்லோரும் வாக்குக் கேட்டுவரலாம், ஆனால் யாரை வெற்றிபெற வைக்க வேண்டும் என்பது உங்கள் கைகளில்தான் உள்ளது. நாம் தேர்தல் காலங்களில் மட்டும் அல்ல, எப்போதும் மக்களுடன் மக்களாக வாழ்கின்றோம்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. உதவி ஆசிரியர் நியமனம் உட்பட பல விடயங்களைச் செய்துள்ளோம். காணி உரிமையை பெற்றுக் கொடுப்பதற்கு உரிய ஏற்பாடுகளை செய்தோம்.

புதிய ஜனாதிபதி நாட்டை பற்றி பேசினாலும் மலையக மக்கள் பற்றி கதைப்பதில்லை. எனவே எமது பிரதிநிதித்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளுங்கள். நாம் சபையில் இருந்தால்தான் உரிமைகளை, அபிவிருத்திகளை கேட்டு பெறலாம். நுவரெலியா மாவட்டத்தில் 8 ஆசனங்களுக்கு 308 பேர் போட்டியிடுகின்றனர். தேர்தலின் பின்னர் 300 பேர் சென்றுவிடுவார்கள். எனவே, மக்களுடன் இருப்பவர்களையே மக்கள் தெரிவுசெய்ய வேண்டும். தேர்தல் முடிந்ததும் பல சுயேச்சைக் குழுக்கள் காணாமல்போய்விடும்.

காங்கிரஸ்தான் களத்தில் நின்று செயற்படும். எனவே, நுவரெலியா மாவட்டத்தில் இ.தொ.கா. சார்பில் யானை சின்னத்தில் போட்டியிடும் எங்கள் மூவரையும் நாடாளுமன்றம் அனுப்பிவையுங்கள்.– என்றார்.

# அன்று நாம் மக்களுக்காக யுத்தத்தில்; இன்று அரசியலில் களமிறங்கினோம்!

## ஜனநாயக பெண் போராளி வேட்பாளர் தவமணி

(வி.ரி.சகாதேவராஜா)

மக்களுக்காக அன்று யுத்தத்தில் களமாடினோம். இன்று 15 வருடங்களுக்குப் பின்னர் அதே மக்களுக்காக ஜனநாயக வழியில் அரசியலில் களமாடப் பிரவேசித்திருக்கின்றோம். உங்கள் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறு ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியில் அம்பாறை மாவட்டம் சார்பாக சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக போராளிகள் கட்சியின் உறுப்பினர் சுப்பிரமணியம் தவமணி தெரிவித்தார்.

காரைதீவைச் சேர்ந்த அவர் அவரது இல்லத்தில் நடாத்திய ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

அன்று அகிம்சை வழியில் போராடினோம். பின்பு ஆயுத வழியில் போராடினோம். இன்று அரசியல் போராட்டம் இடம்பெறுகின்றது.

தென் இலங்கையில் அன்று ஆயுதம் தாங்கிய போராட்டம் இன்று அரசியல் போராட்டத்தில் வெற்றி பெற்றிருக்கின்றது. அவரே நாட்டின் ஜனாதிபதியாக வந்திருக்கின்றார்.

அதேபோல் நாமும் ஆயுத போராட்டத்தில் களமாடிய நாம் இன்று அதே மக்களுக்காக அரசியல் களம் ஆட வந்திருக்கின்றோம். எனவே வெற்றி நிச்சயம்.

தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை போன்ற தாரக மந்திரங்களை எதிர்கொண்டு இந்தத் தேர்தலில் நாங்கள் இறங்கி இருக்கின்றோம்.

பெண்கள், சிறுவர், வயோதிபர் உரிமைக்காக நாம் போராடி இருக்கின்றோம்.

வருடா வருடம் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. ஆனால் உண்மையில் மகளிருக்கு இதுவரை விடுதலை கிடைக்கவில்லை. வீட்டிலும் வன்முறை நாட்டிலும் வன்முறைகள்.

உரிமைகள் இல்லை. பெண்களுக்கு எப்பொழுது விடுதலை கிடைக்கின்றதோ அன்றுதான் உண்மையான மகளிர் தினம்.



நான் ஒரு போராளி. மேலும் ஒரு மாற்றத் திறனாளி. மாற்றுத்திறனாளிகளுக்கு குரல் கொடுக்க வேண்டும் என்று பல அரிசியல் கட்சிகளிடமும் கேட்டோம். ஆனால் யாரும் கணக்கெடுக்கவில்லை..

விசேட தேவை உள்ளவர்கள் நிச்சயமாக அரசியல் ஈடுபட வேண்டும். நான் அதற்கு ஒரு முழு உதாரணமாக இருக்கின்றேன். எனவே அம்பாறை மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட அனைவரும் என்னை ஆதரித்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆக்க வேண்டும்.

பெண்கள் அரசியலில் முன்வர வேண்டும். 52 வீதமான வாக்களிக்கத் தகுதி உள்ள பெண்களுக்கு அரசியலில் சம உரிமை வழங்கப்படவில்லை. எனவே எனக்குப் பின்னால் அடுத்தடுத்த தேர்தலில் வர இருக்கின்றன. அதற்குக் கட்டாயம் நீங்கள் கைகோர்க்க வேண்டும்.

அன்று எதையும் எதிர்பாராமல் மக்களுக்காக நாங்கள் களத்தில் போராடினோம். அதேபோல் இன்று அரசியலில் அதே மக்களுக்காக ஒரு அங்கீகாரத்தை கேட்டு நிற்கின்றோம்.

நாங்கள் மக்களுடைய சேவை செய்வோம். அரசியல் பெண்கள் ஈடுபட வேண்டும். மக்கள் மீதும் தேசியத்தின் மீதும் நம்பிக்கை வைத்துப் பெண்கள் முன்வராதது கவலை அளிக்கின்றது. சமூகத்துடன் சேவை செய்யும் நான் அரசியலுக்கு வந்திருக்கின்றேன். எனது இலக்கம் எட்டு. என்னை ஆதரித்து நாடாளுமன்றத்துக்கு அனுப்புங்கள். உங்களுக்கான அனைத்து உரிமைகளையும் பெற்றுத்தருவேன்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் சங்கு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தமிழ் வாக்குகளை பிரிக்காமல் ஐந்து கட்சிகள் ஒன்றிணைந்து சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றோம்.

ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பாக நான் எட்டாம் இலக்கத்தில் போட்டியிடுகின்றேன். நம் மக்களின் நலனுக்காக களமாடிய பெண்களில் நானும் ஒருத்தி. அங்கவீனமான நிலையிலும் எமது தமிழ் மக்களின் நலனுக்காக இன்று தேர்தல் களத்தில் ஒருபெண்ணாகப்போட்டியிடுகின்றேன். பெண்களுக்கான அங்கிகாரம் கிடைக்கப் பெண்கள் பக்கபலமாக செயற்பட வேண்டும்.

சமூகத்தின் முதுகெலும்பான பெண்கள் சமூக முன்னேற்ற செயற்பாடுகளில் முன்னுக்கு வர வேண்டும். ஆகவே அம்பாறை மாவட்ட தமிழ் பெண்கள் ஒற்றுமையாக சங்கு சின்னத்திற்கும் எனது இலக்கமான 08 இற்கும் வாக்களிக்குமாறு அன்பாக கேட்டுக் கொள்கிறேன்.

அம்பாறை மாவட்ட தமிழர்களின் நலனில் அக்கறை இல்லாமல் தனித்தனியாக போட்டியிடும் கட்சிகளை மக்கள் புறக்கணிக்க வேண்டும்.- என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## புலனாய்வுத் துறையின் பரிதாபம்

''நாட்டின் புலனாய்வுத்துறையை இந்த அரசு பலப்படுத்த வேண்டும். அவர்களின் மன நிலையை உயர்ந்த மட்டத்தில் வைத்திருக்க வேண்டும். ஆனால், எமக்குக் கிடைத்த தகவலுக்கமைய எமது புலனாய்வுத்துறையினரின் மனநிலை வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அவர்கள் தொடர்பில் அரசு கவனம் செலுத்த வேண்டும்.''

- இவ்வாறு முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

கட்சி அரசியலுக்காக - அதன் நோக்கங்கள், இலக்குகளுக்காக - நாட்டின் புலனாய்வுத் துறையை கவனிக்காமல் விடுவதோ, சீரழிப்பதோ, பலிக்கடாவாக்குவதோ தவறானது என்று அவர் அவர் கூற முயல்கின்றார்.

அதேசமயம் புலனாய்வுத்துறை தொடர்பான விடயங்களை வெளிப்படுத்தி, இப்போது அடிக்கடி செய்திகளில் முன்னிலை பெற்று வரும் பிவித்திரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில்ல ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டி இருக்கிறார். அது அவதானிக்கப்பட வேண்டியுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு தாக்குதல் தொடர்பான சில அதிர்ச்சிகரமான தகவல்களை 'சனல் - 4' தொலைக்காட்சி நிறுவனம் அம்பலப்படுத்தியிருந்தது.

அரச புலனாய்வுத் துறையின் முக்கிய அதிகாரி என்று ஒருவரைக் கோடி காட்டி, அவரது கருத்தாக சில விடயங்கள் அந்தத் தொலைக்காட்சி நிறுவனச் செய்தியில் முன்னர் அம்பலப்படுத்தப்பட்டிருந்தது.

அந்தத் தொலைக்காட்சியில் அப்படி நாட்டின் புலனாய்வுத் துறையைக் காட்டிக் கொடுக்கும் விதத்தில் கருத்து வெளியிட்டவர் யார் என்பதை நேரடியாக சுட்டிக் காட்டாத கம்மன்பில்ல அவர் இப்போது இந்த அரசில் மிக உயர்ந்த பதவியில் இருக்கின்றார், அது ஆபத்தானது என்று நேற்றுப் பத்திரிகையாளர் மாநாட்டில் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அந்த 'சனல் - 4' தொலைக்காட்சியில் முகத்தை நேரடியாகக் காட்டாமல் அரச புலனாய்வுத் துறையை காட்டிக் கொடுக்கும் விதத்தில் கருத்து வெளியிட்டவரின் குரலும், அவர் பயன்படுத்திய சொல்லாடல்களும் அவர் இப்போது இந்த அரசின் உயர் மட்டத்தில் பதவியில் இருக்கின்றமையை அடையாளப்படுத்துகின்றன என்று பெரும் குற்றச்சாட்டை உதய கம்மன்பில்ல எடுத்து விட்டிருக்கின்றார்.

நீண்ட பல வருடங்களாக அரச புலனாய்வுத்துறை சிதைந்து விட்டது என்பதையும், புலனாய்வுத் தகவல்களுக்கு தன்னுடைய சொந்த வளங்கள், மூலங்களில் தங்கி இருப்பதிலும் பார்க்க, வெளிநாட்டுப் புலனாய்வு வட்டாரங்களையே இலங்கையின் புலனாய்வுத்துறை நம்பி இருக்கின்றது என்பதையும் விசனத்துடன் சுட்டிக்காட்டுகிறார் கம்மன்பில்ல.

வெளிநாட்டுப் புலனாய்வாளர்கள் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், உறுதியாகவும் முற்கூட்டியே புலனாய்வுத் தகவல்களைத் தந்தும் கூட, ஈஸ்டர் ஞாயிறு தொடர் குண்டு தாக்குதல் போன்றவற்றைத் தடுப்பதற்கு இலங்கையின் புலனாய்வுத்துறை தவறிவிட்டது என்பதை நோக்குகின்ற போது கம்மன்பில்ல சுட்டிக்காட்டுகின்ற குற்றச்சாட்டுகளில் அர்த்தம் இருப்பதாகவே படுகின்றது.

அரச புலனாய்வுத்துறை அரசியல் தரப்புகளின் நோக்கங்களுக்காக பந்தாடப்படுகின்றது என்பது தெளிவு. அதிலிருந்து மீண்டால் மட்டுமே நாட்டின் பாதுகாப்புத் துறை தப்பிப் பிழைக்கும். இல்லையேல் அதோ கதி தான்.

இப்போது வந்திருக்கும் அதிகார பீடமும் கூட, அரச புலனாய்வுத் துறையை அரசியல் நோக்கங்களின்றும் வெளியே வந்து வழி நடத்தும் எண்ணத்தோடு செயல்படுவதாகத் தெரியவில்லை.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் விவகாரத்தில் பாதிக்கப்பட்ட தரப்புக்களின் பிரதிநிதி என்ற கோதாவில் தொடர்ந்து குரல் எழுப்பி வரும் கர்தினால் மல்கம் ரஞ்சித் போன்றோரோடு சேர்ந்து இந்த விவகாரத்தை அரசியல் விடயம் போன்று இந்த அரசுத் தலைமையும் கையாள்வதாகவே தோன்றுகின்றது.

அரசியல் நோக்கங்கள், இலக்குகள், கருத்துக்களைப் புறம் தள்ளி வைத்துவிட்டு, அரச புலனாய்வுத்துறை தனக்கே உரித்தான தனித்துவம், இரகசியம் பேணல், நாட்டின் பாதுகாப்புக்கு மட்டும் முன்னுரிமை கொடுத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் செயற்பட அனுமதித்தால் மட்டுமே அத்துறையினால் நாடு உரிய பயனை அடையும். அடைய முடியும். இல்லையேல் அரசியல் தரப்புகளின் இழுபறிகளுக்குள் மேலும் இழுபட்டு, சிக்குப்பட்டு, அத்துறை தானும் கந்தறுந்து நாட்டையும் கந்தறுக்கச் செய்யப் போவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.





# பிரித்தானியா - சிவபாத நாட்டியாலய மாணவிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம்

(எஸ்.ஆர்.லெம்பேட்)

சிவபாத நாட்டியாலய மாணவிகளான கிருஷ்ணகுமார் – சிவாஜினி தம்பதிகளின் புதல்விகளான சகோதரிகள் மதுஷா, மிதுனா அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்ற விழா கடந்த சனிக்கிழமை மாலை லண்டன் கரோ கலைக் கூடத்தில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக நாட்டிய கலைமாமணி , நாட்டிய கலா விதுசினி திருமதி பிரேமலாதேவி ரவீந்திரன், சிறப்பு விருந்தினர்களான கானபூசணம் அம்பிகா தாமோதரம் மற்றும் சிவஸ்ரீ சௌபாக்கிய சசிகுமாரக் குருக்களும் கலந்து கொண்டனர்.









# இறால் பிடியில் பெண்கள்!

இலங்கையில் கரையோர பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் பிரதான தொழில் மீன்பிடி. அதன் இன்னு மோர் அங்கமாக இறால் பிடியும் காணப்படுகின்றது. அந்த வகையில் கடல்வாழ் உயிரினங்களின் இறந்த உடல்கள் கடல் நீரில் கழிவுப் பொருள்களாக மாறுகின் றன. இவற்றில் கழிவுப் பொருள்களை கடலில் உள்ள இறால் மீன்கள் உண்டு வாழ்கின்றன. இவற்றைக் "கடலின் தூய்மையாளர்" என அழைப்பர்.

பெரிய வளர்ச்சியடைந்த இறால் மீன்கள் ஆழ்கடல் பகுதியில் உள்ளன. ஆழ்கடல் பகுதியில் தான் இவை முட்டையிடுகின்றன. முட்டைகளும் அங்கேயே முதிர்ச்சி யடைகின்றன. முட்டையில் இருந்து வெளிவரும் குஞ்சு கள் கடல் அலைகளால் அடித்து வரப்படுகின்றன. இந்த குஞ்சுகள் சதுப்பு நிலக்காடுகளிலும், கடலோர கரையிலும் ஒதுங்குகின்றன. சதுப்பு நிலக்காடுகள், கரையோரங்களில் மீன்பிடி தொழில் நடப்பதால் இறால் மீன்கள் இளம் பருவத்திலேயே அழிந்து விடுகின்றன. இதனால் இவை குறைவதால் ஆழ்கடல் பகுதியில் வளர்ச்சியடைந்த இறால் மீன்களும் குறைகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமுளமுனை மற்றும் ஆறுமுகத்தான்குளம் பகுதிகளில் வாழ்கின்ற சில பெண்களின் வாழ்வாதாரத் தொழிலாக கைகளால் இறால் தொழில் காணப்படுகின்றது. மிக நீண்ட காலமாக இத்தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். குமுளமுனை கிராமத்தை ஆண்டிய பகுதிகளில் காணப்படும் மக்களால் கரைச்சி வெட்டை என்று அழைக்கப்படும் சிறுகடலானது நாயாறு பெருங்கடலோடு தொடர்புடையது. இந்த சிறுகடலில் 55 க்கும் மேற்பட்ட மீன்பிடியாளர்கள் மீன் பிடிக்க தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சிறு கடலில் இருபதுக்கு மேற்பட்ட பெண் தொழிலாளிகள் கைகளால் இறால் தடவி பிடிக்கும் தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். குறிப்பாக இவர்களில் பெரும்பாலான பெண்கள் கண வனை இழந்த பெண்கள் குடும்ப வறுமை காரணமாக இத்தொழிலை வாழ்வாதாரமாக மேற்கொண்டு வருகின்றமையை காணலாம். இவர்கள் கரைச்சிவெட்டை சிறுகடல், சம்போடை போன்ற ஆறுகளில் இறால் பிடியை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பெண்களின் ஜீவனோபாயத் தொழிலாக இறால் பிடி காணப்படுகிறது. இதன் மூலம் இவர்கள் வருமானத்தை ஈட்டுவதோடு அவர்களது உணவாகவும் காணப்படுகிறது. இவர்கள் தினந்தோறும் இறால் பிடித்ததற்காக 04 கிலோ மீற்றர் நடந்து செல்கின்றனர். அதிகாலையில் 4 மணியிலிருந்து பிற்பகல் இரண்டு மணி வரை இவர்கள் கடலிலே தமது நேரத்தை செல வழிக்கின்றனர். குறிப்பாக மாரி காலத்தில் அதிகளவான இறால் பிடிப்பதாகவும் அதிலும் குறிப்பாக கார்த்திகை மாதம் தொடக்கம் பங்குனி வகையான காலப் பகுதியில் இறால் அதிகமாக காணப்படுவதாகவும் கூறினார்கள்.

கோடை காலத்தில் குறைவான இறாலைப் பிடிப்ப தோடு தாம் பிடிக்கின்ற இறாலினை அருகில் உள்ள சந்தை, வாடிகள் மற்றும் ஊர் மக்களுக்கு விற்பனை செய்வதாகவும் கூறினார்கள். மாரி காலத்தில் கழுத்த ளவில் தண்ணீர் இருந்தாலும் அவர்களுக்கு மாரி காலத்தில் இறால் பிடிப்பது இலகு என்றும் கோடை காலத்தில் நீர் வற்றிப் போவதால் அதிகளவு சேறும் சுரியுமாக கடினமாக இருப்பதாகவும் கூறினர்கள்.

இந்தக் கடலிலே கறுப்பு இறால், வெள்ளை இறால், மோட்டு இறால் போன்ற இறால் வகைகளும் திரளி, கெழுத்தி, மணலை போன்ற மீன் இனங்களையும் அத்தோடு நண்டும் பிடிப்பதாகவும் கூறினர். அது மட்டுமின்றி கரையோர பகுதிகளில் தண்ணீர் பாம்பு களின் நடமாட்டம் காணப்படுவதாகவும் தெரிவித்தனர்.


நாயாறு பெருங்கடலிலிருந்து சிறு கடலுக்கு வரும் இறால் இனங்களை வீச்சு வலை மூலம் 50 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் பிடிப்பதால் தமக்கு தடவி பிடிப்பதற்கு இறால் இல்லாமல் போகிறது என்றும் கூறினார்கள். "காட்டுப் பகுதியாகக் காணப்படுவதால் பெண்கள் தனியாக ஒரு ஆள் பிடிப்பதற்கு வருவது கடினம் என்றாலும் குடும்ப வறுமை காரணமாக இந்த கடலில் இறால் பிடித்தால் தான் அன்றாட உணவு உண்ண முடியும் என்றும் யுத்தத்தில் ஒரு மகனை இழந்தும் கணவனை இழந்தும் வேறெந்த உதவியும் இன்றி தனியாக கடலை நம்பி தான் வாழ்வதாகவும்" குமுளமுனையை சேர்ந்த செல்லம் (வயது 68) அவர்கள் கூறினார். கிட்டத்தட்ட 58 வருடங்களுக்கு மேலாக தான் இறால் பிடிப்பதாகவும் அவர் கூறினர்.

ஆறுமுகத்தான்குளத்தை சேர்ந்த புஷ்பராணி என்பவர் தனது பத்து வயதில் இருந்து இன்றுவரை இறால் பிடியை மேற்கொண்டு வருவதாகவும் யுத்தத்தில் தனது கணவரை இழந்து தனியாக வாழ்ந்து வருவதாகவும் கடலை நம்பியே வாழ்க்கை செல்கிறது எனவும் தெரிவித்திருந்தார்.

இறால் பிடியை மேற்கொள்ளும் பெண்கள் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினையாக வீச்சுவலை மூலம் மீனவர்கள் இறால் பிடிப்பதால் தமக்கு பிடிப்பதற்கு இறால் பற்றாக்குறை காணப்படுவதாகவும் கூறி இருந்தனர். இது தொடர்பாக தான் மேல் அதிகாரிகளுக்கு தெரிவித்த போதும் அது தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு எட்ட முடியவில்லை எனவும் கூறியிருந்தனர்.

இது தொடர்பாக குமுளமுனை உதய சூரிய மீனவர் சங்கத் தலைவரான றொபின்சனோடு நேர்காணல் மேற்கொண்ட போது "எமது சங்கத்தில் 55 இற்கும் மேற்பட்ட நபர்கள் இருக்கின்றனர். சில பெண்களை கடலை நம்பி இறால் பிடி தொழில் செய்பவர்களாகவும் காணப்படுகின்றனர். வலை வீசும் மீனவர்களும் இந்தக் கடலை நம்பியே தமது குடும்பங்களைக் கொண்டு செல்கின்றனர். இறால்பிடி மேற்கொள்வதற்கு அருகில் வேறெந்த கடற்கரைகளும் இல்லாததால் இந்த கடலையே அனைவரும் பயன்படுத்த வேண்டும்" என்றார்.

**சுதா திலேஜா**
**ஊடகக் கற்கைகள்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA



# கொக்கட்டிச்சோலை பிரதான வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கான பிரதான வீதி குன்றும் குழியுமாகப் படுமோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான செய்திகள் வெளியான நிலையில் செய்திக்குப் பலன் கிடைத்திருக்கிறது.

மகிழடித்தீவு சந்தியிலிருந்து அம்பிளாந் துறைச் சந்தி வரையான பிரதான வீதியின் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் எடுக்கும் நில அளவை மதிப்பீட்டு பணிகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

இவ் மிக மோசமாக போக்குவரத்துக்குப் பொருத்தமில்லாத வகையில் பாதிக்கப்பட்டு இருந்தது. அதனால் பயணிகள் அசௌகரியமடைந்து வருகின்றனர்.

இந்த வீதியில் பிரதேச செயலகம், பிரதேச சபை பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம், ஆசிரியர் வள நிலையம், கோட்டக்கல்வி அலுவலகம், பாடசாலைகள் உள்ளன.

ஆனால் அதற்கான இந்தப் பிரதான வீதி பல வருட காலமாகச் செப்பனிடப்படாமல் கைவிடப்பட்ட காரணத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு உள்ளது.

தற்போது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# அனைத்து இன, மத மக்களையும் உள்வாங்கி மட்டக்களப்பை கட்டியெழுப்புவதே எனது கனவு!

## தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் பிர்தௌஸ்

( ஹஸ்பர் )

மட்டக்களப்பில் வாழும் அனைத்து இன, மத, கொள்கை வேறுபாடுகளைக் கொண்ட மக்களையும் இலங்கையர் எனும் அடையாளத்தின் கீழ் ஒன்றிணைப்பதே தனது பிரதான கனவு என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் எம்.பி.எம். பிர்தௌஸ் தெரிவித்தார்.

காத்தான்குடியில் நடைபெற்ற முதலாவது தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில்,

அனைவரையும் உள்ளடக்கிய மட்டக்களப்பு என்பதே எனது கனவாகும். கடந்த காலங்களில் யுத்தம் மற்றும் வேறு பல காரணங்களால் மக்கள் மத்தியில் பிரிவினைகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அரசியல்வாதிகளும் தமது வாக்கு வங்கிக்காக இங்கு வாழும் சமூகங்களை பிரித்து வைப்பதிலேயே குறியாக இருந்துள்ளனர். இதற்காகவே பிரதேசவாதமும் மக்கள் மனங்களில் விதைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் இந்த வேறுபாடுகளை மறந்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவுக்கு மட்டக்களப்பு மாவட்ட மக்கள் 38 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளை வழங்கியுள்ளனர். நாம் வேறுபாடுகளை மறந்து இலங்கையர் என்ற குடையின் கீழ் ஒன்றிணைந்ததன் மூலமே இந்த வெற்றி சாத்தியமாகியுள்ளது.

அதேபோன்றுதான் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலிலும் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட வேண்டும். இதற்கான சரியான தெரிவு இனத்துவ சிந்தனைகளை முன்னிறுத்திய கட்சிகளை விடுத்து, சகல



இன மக்களையும் ஒன்றிணைக்கக் கூடிய தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதேயாகும்.

தமிழ் பிரதிநிதி ஒருவர் முஸ்லிம்களுக்காக குரல் கொடுக்கின்ற நிலைமையும், அதேபோல் முஸ்லிம் பிரதிநிதி ஒருவர் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கின்ற நிலைமையும் இந்த மாவட்டத்தில் உருவாக்கப்பட வேண்டும். ஓர் ஊரைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் அந்த ஊருக்கு மாத்திரமன்றி முழு மாவட்டத்துக்குமே சேவை செய்யும் அரசியல் கலாசாரத்தை நாம் தோற்றுவிக்க வேண்டும். அந்தவகையில் நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால் வெறுமனே ஓர் ஊருக்காக அல்லது ஓர் இனத்துக்காக மாத்திரமின்றி முழு மாவட்டத்துக்குமான பிரதிநிதியாக செயற்படுவேன்.- என்றார்.

# மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு மீண்டும் சந்தர்ப்பம் வேண்டும்!

## முன்னாள் எம்.பி. தௌபீக்



இந்த முறை தேர்தலில் வெற்றியீட்டி ஆளுந்தரப்பிலோ எதிர் தரப்பிலோ நாடாளுமன்ற உறுப்பினரானால் மக்கள் குறைகளை தீர்த்து வைப்பேன்.

இதற்கு மீண்டும் ஒரு முறை சந்தர்ப்பம் தாருங்கள்

இவ்வாறு ஐக்கிய மக்கள் கூட்டணியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.தௌபீக் தெரிவித்தார்.

கிண்ணியாவில் உள்ள மத்திய அலுவலகத்தில் இடம் பெற்ற சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் கடந்த 2020 ஆம் ஆண்டில் அமோக வெற்றி வாகை சூடிய நான் இந்த முறை அதனை விட மூன்று மடங்கு களத்தில் இறங்கியுள்ளேன்.

வீட்டுக்கு வீடு பிரச்சாரப் பணியில் திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் திறம்பட கட்சி ஆதரவாளர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறேன்.

24 வருட கால அரசியலில் சமூகத் துக்காகத் தன்னை அர்ப்பணம் செய்து பல அபிவிருத்திகளை குக் கிராமம், நகரம் எனச் செய்து காட்டியுள் ளேன்.

இந்த முறையும் நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும். திருகோணமலை மாவட்டம் இரு ஆசனங்களை வெற்றி கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. இதனால் ஆளுங்கட்சி அரச பிரதி நிதியாகவோ அல்லது எதிர் கட்சிப் பிரதி நிதியாகவோ எதுவாக இருந்தாலும் மக்கள் குறைகள் தீர்க்கப்பட்டு சேவைகள் இடம் பெறும்.- என்றார்.



# சேவை நலன் பாராட்டு விழா

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் (தேசிய பாடசாலை) அதிபர் சேவையாற்றி அக்கரைப்பற்று கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்றுச் செல்லும் இலங்கை கல்வி நிர்வாக சேவை சிரேஷ்ட அதிகாரி ஏ.எச். பௌஸிக்கான சேவை நலன் பாராட்டு விழாவும் பிரியாவிடை நிகழ்வும் கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றன.

பிரதி அதிபர் ஏ.எல்.நஸீபா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது அதிபர் ஏ.எச். பௌஸ் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய இசை வழங்கி வரவேற்கப் பட்டார்.

இதன்போது அதிபர் பௌஸின் தன்னலமற்ற சேவை தொடர்பில் பல்வேறுபட்டோர் பிரஸ்தாபித்து உரை நிகழ்த்தினர்.



கவி வாழ்த்துகளும் பாடப்பட்டு வாழ்த்துப் பத்திரங்களும் வழங்கி வைக்கப்பட்டன. நினைவுப் பரிசில்கள் மற்றும் ஞாபகச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன. பொன்னாடைகள் போர்த்தியும் கௌரவிக்கப்பட்டனர். இதன்போது கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.செய்னுதீன், பிரதி அதிபர்களான எம்.ஏ. சலாகுதீன், என்.எம்.எம்.ஸாலிஹ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் அதிதிகளாக கலந்து கொண்டனர்.



# சூரிய மின்கல படலம் நிறுவுதல் தொடர்பில் திருமலையில் பயிற்சி

**(எஸ்.கீதபொன்கலன்)**

சூரிய மின்கல படலம் நிறுவுதல் மற்றும் பாரமரித்தல் தொடர்பான இரண்டு நாள் பயிற்சி நெறி திருகோணமலை மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன் தலைமையில் மாவட்ட செயலக புதிய ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு மற்றும் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் ஏற்பாட்டில் தொழில் வாய்ப்பின்றி காணப்படும் இளைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு புலம் பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு இணை அனுசரணை வழங்கியுள்ளது.

எமது நாடானது பொருளாதார வீழ்ச்சியில் இருந்து தற்போது மீண்டு வந்து கொண்டிருக்கின்றது. அந்த வகையில் எங்களுடைய நாட்டில் தொழிற் பயிற்சிகள் குறுகிய காலப் பகுதியில் வளர வேண்டியுள்ளது.

அந்த அடிப்படையிலே தொழில் முயற்சிகளை இனங்காணுதல் மற்றும் தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சியை வழங்கும் பல்வேறு நிகழ்வுகளை பல்வேறு நிறுவனங்கள் குறுகிய காலப் பகுதிக்குள் வழிப்படுத்த வேண்டிய தேவையிருக்கின்றது என மாவட்ட மேலதிக அரச அதிபர் இதன் போது கூறினார்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இது தொடர்பாக தொழில் திறமைகளை வளர்த்துக் கொள்வதன் ஊடாக இந்த துறையிலேயே நீண்டதொரு சேவையை செய்யக் கூடிய வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதி இருப்பதால் இதனை சரியான முறையில் கற்றுக்கொண்டு உங்களை நீங்களே வளர்த்துக் கொள்ளுங்கள் எனவும் கருத்துக் கூறினார்.

இந்தப் பயிற்சியில் கலந்து கொண்ட 50 பயிற்சியாளர்களுக்கும் என்.வி.கியூ. சான்றிதழ்களுக்கு நிகரான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வில் இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் பணிப்பாளர் அனுராதி பெரேரா, இழப்பீடுகளுக்கான அலுவலகத்தின் உதவி பணிப்பாளர் அருன் பிரதீபன், பொதுப் பயன்பாட்டு ஆணைக் குழுவின் உதவி பணிப்பாளர் ஜெய சூரியன், இலங்கை நிலைத்து நிற்கும் சக்தி அதிகார சபையின் செயற்றிட்ட ஒருங்கிணைப்பாளர் பத்மதேவ், மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் என்.கோவிந்தராஜன், திருகோணமலை மாவட்ட இழப்பீடுகளுக்கான அலுவலகர் என்.நிஜாஸா ஆகியோர் கலந்து கொண்டனர்.





# மணிவிழா ஆண்டில் தருமபுரம் ஆதீனம்!

தருமபுரம் ஆதீனம் அல்லது தருமை ஆதீனம் என்பது சைவ மடங்களுள் ஒன்றாகும். தமிழ்நாட்டில் மயிலாடுதுறையில் இம்மடம் அமைந்துள்ளது. இந்த மடம் குருஞான சம்பந்தரால் தொடங்கப்பட்டது. சுமார் 27 மிகப்பெரும் சிவாலயங்கள் மடத்தினுடைய கட்டுப்பாட்டின் கீழ் காணப் படுகின்றன.

இவ்வாதீனம் சமயம் சார்ந்த பணிகளோடு, மயிலாடு துறையில் மகப்பேறு நிலையம் அமைத்தும், சிங்கிப்பட்டி காசநோய் மருத்துவமனை, அடையார் புற்றுநோய் வைத்தியசாலை, போன்ற பொது நிறுவனங்களுக்குப் பெருந்தொகை நிதி வழங்கியும், ஏழை மாணவர்களுக்கு கல்வி கற்க கட்டண உதவி புரிந்தும் சமூகப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றது. ஞானசம்பந்தம் என்ற திங்கள் இதழையும் இந்த மடம் வெளியிடுகிறது.

இவ்வாறு சமயப்பணியுடன் சமூகம் சார்ந்த நற்பணிகள், பல்வேறு வகைகளில் முன்னெடுக்கப்படுகின்றன.

திருமுறை கண்ட குருமணிகள் எனப் போற்றி அழைக் கப்படும் 27 ஆவது நட்சத்திர குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ மாசிலா மணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் வழிகாட்டல் காலப் பகுதியில் சமயப்பணி மிக வேகமாக ஆர்வமாக முன்னெடுக்கப்படுகின்றமை திருவருளே.

மேலும் திருவருளுடன் சன்னிதானம் அவர்களின் திருவுளப்பாங்கின் வண்ணம் இறைபணியில் உள்ள சிவாச் சார்யார்கள், திருமுறை ஓதுவா மூர்த்திகள், மங்கலவாத்ய கலைஞர்கள் என பல்வேறு வகையில் கௌரவம் செய்து வருகிறார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது.

“சிவாகம கலாநிதி” எனும் சிறப்புடன் பட்டத்துடன் கௌர வம், பொற்கிளி என வழங்கி மகிழ்ச்சியடைகிறார்கள். கீரிமலை ஆதீனம் சிவஸ்ரீ நகுலேஸ்வர குருக்கள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ மஹாதேவ குருக்கள், சுன்னாகம் சிவஸ்ரீ சர்வேஸ்வர குருக்கள், நயினை சிவஸ்ரீ வாமதேவ குருக்கள், அச்சுவேலி சிவஸ்ரீ வைத்தீஸ்வரக் குருக்கள், வட்டுக்கோட்டை சிவஸ்ரீ பிரசாந்த குருக்கள் என தொடர்கிறது.

இது போல “நாதஸ்வர கலாநிதி” என ஈழ நல்லூர் பால முருகன், கேதீஸ்வரன், குமரன் என நீள்கிறது. சமூக சேவையில் ஆறுதிருமுருகன்.

இதுபோல “திருமுறைக்கலாநிதி” எனவும் சிறப்பு









செய்கிறார்கள்.

மேலும் அச்சுவேலி உலவிக்குளம் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், அச்சுவேலி சிவாகமஞானபானு சிவஸ்ரீ ச குமாரசாமி குருக்கள் அவர்களினது நினைவு அறக்கட்டளை என்பவை இணையவழி மெய்வழியே ஒவ்வொரு வியாழக்கிழமைதோறும் நடாத்தும் “அகிலமெங்கும் ஒலித்திடும் சிவநெறிய திருமுறை விண்ணப்ப தெய்வீக அரங்கு” நிகழ்ச்சியில் ஆசி வழங்கு வதுடன் வாரந்தோறும் தம்பிரான் சுவாமிகள் இணையவழி மெய்வழியே இணைந்து நல்வாழ்த்துக்கள் நல்லாசிகள் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. திருக்கேதீச்சர நாதர் ஆலய சூழலில் தருமை ஆதீன கிளைமடம் இறை பணியாற்றிவருவதும் சிறப்புக்குரியது. இவ்வருடம் முழுவதும் மணிவிழா ஆண்டாக ஆதீனத்தால் அறிவிக்கப்பட்டு நற்பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இத்தகைய மகிழ்ச்சியான செய்திகளுடன் இந்துக்குருமார் அமைப்பினர் இலங்கை வாழ் சைவ மக்கள் சார்பில் தங்களின் அன்புக்கினிய மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தலைவர், சிவாகம கலாநிதி சிவஸ்ரீ கு.வை. க வைத்தீஸ்வர குருக்கள், செயலாளர், சிவஸ்ரீ ச. சாந்தரூப குருக்கள் ஆகி யோர் பகிர்ந்து கொள்கின்றனர்.

# நாகை மீனவர்கள் 12 பேரை விடுவிக்க நடவடிக்கை: வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் கடிதம்



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நாகப்பட்டினம் மீனவர்கள் 12 பேரையும் விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடுகையில்,

“நாகப்பட்டினத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் கடந்த 26 ஆம் திகதி படகில் மீன்பிடிக்கச் சென்றிருந்தபோது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவது, இந்தியாவில், குறிப்பாக தமிழகத்திலுள்ள மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறது. இந்தஆண்டில் இதுவரை 30 சம்பவங்கள் நடந்துள்ளன.

கடந்த 27 ஆம் திகதி நிலவரப்படி 140 மீனவர்கள் மற்றும் 200 மீன்பிடிப் படகுகள் இலங்கை அரசு வசம் உள்ளன. எனவே, இந்த பிரச்சினையை முன் னுரிமை அடிப்படையில் எடுத்துச்சென்று, இலங்கை அரசால் கைது செய்யப்பட் டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நட வடிக்கை எடுக்க வேண்டும்.” – என்று குறிப்பிட் டுள்ளார்.

# விஜய் நிலைப்பாட்டில் தடுமாற்றம் தெரிகிறது



## திருமாவளவன் விமர்சனம்

“பாசிசத்துக்கும் பாயாசத்துக்கும் என்ன தொடர்பு என்று தெரியவில்லை. பாசிசம் என்னால் என்னவென்று அவர் உணர்ந்திருக்கிறார் என்று தெரியவில்லை. விஜய்யின் நிலைப்பாட்டில் தடுமாற்றம் தெரிகிறது.”

– இவ்வாறு வி.சி.க. தலைவர் திருமாவளவன் விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பில் செய்தியாளர்களிடம் அவர் நேற்று கருத்து தெரிவிக்கையில்,

“நடிகர் விஜய் ஒரு முன்மொழிதலை தமிழ்ச் சமூகத்துக்கு வழங்கியிருக்கிறார். அவை அனைத்துமே பல்வேறு கட்சிகளால் முன்மொழியப்பட்டவைதான். ஒன்றைத் தவிர. கூட்டணி ஆட்சிக்கு அவர் அச்சாரம் போட்டிருக்கிறார். ஆனால் ஆட்சிக்கு ஒருவேளை வரும் சூழலில் இந்த நிலைப்பாட்டை அவர் எடுப்பாரா என்பது கேள்விக்குறிதான்.

ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பது எங்களுக்காக வைக்கப்பட்ட கோரிக்கை என்பதை நாங்களே கற்பனை செய்து கொள்ள முடியாது. திமுகவை பொது எதிரி என்று அறிவித்திருப்பதும் தி.மு.க. கூட்டணியை குறிவைத்திருப்பதும் தான் நடிகை விஜய்யின் ஒட்டுமொத்த உரையின் சாரம். என்னைப் பொறுத்த வரை தி.மு.க. தலைமையிலான கூட்டணி வலுவாக இருக்கிறது.

அதே போல பாசிச எதிர்ப்பை நையாண்டி செய்திருக்கிறார். பாசிசம் என்பது தமிழ்நாட்டை பொறுத்தவரை பா.ஜ.கவை அடையாளப்படுத்தும் ஒரு சொல். பாசிச எதிர்ப்பு என்றால் பா.ஜ.க. எதிர்ப்புதான். பா.ஜ.க. எதிர்ப்பை அவர் நையாண்டி செய்கிறாரா என்ற கேள்வி எழுகிறது. ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற அவருடைய கருத்துக்கு அது முரண்பாடாக இருக்கிறது. பாசிசத்துக்கும் பாயாசத்துக்கும் என்ன தொடர்பு என்று தெரியவில்லை. பாசிசம் என்னால் என்னவென்று அவர் உணர்ந்திருக்கிறார் என்று தெரியவில்லை. விஜய்யின் நிலைப்பாட்டில் தடுமாற்றம் தெரிகிறது.

ஒரு அடி மாநாடு அடுத்த அடி கோட்டை என்று விஜய்யின் கற்பனை அதீதமாக இருக்கிறது. வாமன அவதாரத்தின் போது உலகை மூன்றடி உயரத் தில் அளந்ததாக சொல்வார்கள். அதுபோல கட்சி தொடங்கி மாநாடு என்ற ஒரு அடியை எடுத்து வைத்து அடுத்த அடியே கோட்டையில் வைப்போம் என்று சொல்வது நடைமுறைக்கு சாத்தியம் இல்லாதது. அரசியலில் எதுவுமே படிப்படியாகத்தான் செல்ல முடியும்.” – என்றார்.



## ஜாபர் சாதிக் மீதான வழக்கு:

# இயக்குநர் அமீர் உட்பட 12 பேருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவு

ஜாபர் சாதிக் மீதான சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச்சட்ட வழக்கில் குற்றப்பத்திரிகை நகல் வழங்குவதற்காக இயக்குநர் அமீர் உட்பட 12 பேருக்கு அழைப்பாணை அனுப்ப சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் வழக்கில் திரைப்படத் தயாரிப்பாளரான ஜாபர் சாதிக்கை மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸார் கடந்த மார்ச் மாதம் கைது செய்தனர்.

இந்நிலையில் சட்டவிரோத பணப்பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக அமலாக்கத் துறை அதிகாரிகளும் கடந்த ஜூன் 26 இல் ஜாபர் சாதிக்கை கைது செய்து சென்னை புழல் சிறையில் அடைத்தனர்.

இந்த வழக்கில் ஜாபர் சாதிக்கின் சகோதரர் முகமது சலீம் மற்றும் திரைப்பட இயக்குநர் அமீரிடமும் விசாரணை நடத்தப்பட்டது. இந்நிலையில் முகமது சலீமை அமலாக்கத் துறையினர் கடந்த ஓகஸ்ட் 12 இல் கைது செய்தனர்.

இந்த வழக்கில் ஜாபர் சாதிக், முகமது சலீம், ஜாபர் சாதிக்கின் மனைவி அமீனா பானு, இயக்குநர் அமீர் உட்பட 12 பேருக்கு எதிராக சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் கடந்த செப்டம்பரில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் வழக்கு விசாரணை 13 ஆவது கூடுதல் சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில், இந்த வழக்கு சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்ற நீதிபதி எஸ்.எழில் வேலவன் முன்பாக நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சிறையில் உள்ள ஜாபர் சாதிக், அவரது சகோதர் ஆகியோர் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அதையடுத்து இந்த வழக்கில் குற்றப்பத்திரிகை நகல் வழங்குவதற்காக எதிர்வரும் நவம்பர் 11 இற்கு தள்ளி வைத்துள்ள நீதிபதி இந்த வழக்கில் தொடர்புடைய அமீர் உள்ளிட்டோருக்கு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டுள்ளார்.




# இஸ்ரேலின் தாக்குதல்களில் 45 பாலஸ்தீனியர்கள் பலி!

இஸ்ரேலிய இராணுவ தாக்குதல்களில் மேலும் 45 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர் ஏன் எகிப்திய ஜனாதிபதி அப்டெல் பற்றா அல்-சிசி தெரிவித்துள்ளார்.

ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலமாக நடைபெறும் இந்த மோதலை கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வரும் நோக்கில் புதிய திட்டம் ஒன்று குறித்து முன்மொழியப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கு அமைய சில பாலஸ்தீனிய கைதிகளுக்காக, ஹமாசின் நான்கு இஸ்ரேலிய பணய கைதிகளைப் பரிமாறிக் கொள்வதற்காக இரண்டு நாள் போர் நிறுத்தத்தை அவர் முன்மொழிந்துள்ளார்.

இது தவிர, யுத்தத்தின் கோரத்தை தணிக்கும் நோக்கில் கட்டாரில் இடைநிறுத்தப்பட்டிருந்த சமாதான பேச்சுவார்த்தைகள் மீளவும் எதிர்வரும் 10 நாள்களுக்குள் ஆரம்பிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தைகளில் அமெரிக்க மத்திய புலனாய்வு பணிப்பாளர்களும் இஸ்ரேலின் புலனாய்வு பிரிவான மொசாட்டின் அதிகாரிகளும் கலந்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எகிப்தினால் முன்மொழியப்பட்ட புதிய திட்டம் குறித்து இஸ்ரேலோ அல்லது ஹமாஸ் தரப்பினரோ இது வரை எந்த தகவலையும் வெளியிடவில்லை.

ஆனால், கட்டாரில் நடைபெறும் சமாதான பேச்சுவார்த்தைகளுடன் நெருங்கிய தொடர்பினை கொண்டுள்ள பாலஸ்தீனிய அதிகாரி ஒருவர் முன்மொழிவினை வரவேற்றுள்ளார்.

எப்படியிருப்பினும், சமாதான பேச்சுவார்த்தைகளினூடாக எட்டப்படும் ஒப்பந்தத்தில் யுத்தம் உடனடியாக நிறுத்தப்படுவதுடன், காசாவில் நிலைகொண்டுள்ள இஸ்ரேலிய துருப்பினர் அங்கிருந்து வெளியேற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, காசாவில் ஹமாஸ் ஒரு இராணுவ சக்தியாகவும், ஆட்சியினை முன்னெடுக்கும் அமைப்பாக செயல்படுவதில் இருந்து முற்றாக அகற்றப்பட்டதன் பின்னரே தாக்குதல்கள் நிறுத்தப்படும் என இஸ்ரேல் தெரிவித்திருந்தது.




# காசா போர் நிறுத்தத்திற்கு பரிந்துரை செய்தது எகிப்து

நான்கு பிணைக்கைதிகளை திரும்பப் பெறுவதற்கான போர் நிறுத்தத்தை எகிப்து பரிந்துரை செய்துள்ளதாக சர்வதேச ஊடகத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அமைப்பினருக்கும் இடையில் போர் நடைபெற்று வருகிறது. ஹமாஸ் அமைப்பினரை குறிவைத்து காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த தாக்குதலில் பலஸ்தீன மக்கள் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் ஹமாஸ் அமைப்பினர் பணயக்கைதிகளாக பிடித்துச் சென்றவர்களை மீட்கும் வரை தாக்குதல் ஓயாது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் ஏற்பட எகிப்து மத்தியஸ்தராக செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஒருவாரம் போர் நிறுத்தம் ஏற்பட்டது. 100 இற்கும் மேற்பட்ட பணயக்கைதிகளை விடுவிக்கப்பட்டனர்.

கடந்த வாரம் இஸ்ரேல் - காசா இடையே போர் நிறுத்தம் ஏற்பட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. இந்த நிலையில் நான்கு பணயக்கைதிகளை திரும்பப் பெறுவதற்கான போர் நிறுத்தத்தை எகிப்து பரிந்துரை செய்துள்ளது.

நான்கு பணயக்கைதிகளை திரும்பப் பெற இரண்டு நாள்கள் போர் நிறுத்தத்திற்கு பரிந்துரை செய்துள்ளது. இந்த தகவலை எகிப்திய ஜனாதிபதி அப்தெல்-ஃபத்தா-எல்-சிசி தெரிவித்துள்ளார்.

நான்கு பணயக்கைதிகளுக்காக இஸ்ரேல் சிறையில் பலஸ்தீனர்களை இஸ்ரேல் விடுவிக்க வேண்டும். இரு தரப்பிலும் இந்த பரிந்துரை ஏற்கப்பட்டால் நான்குபணயக்கைதிகள் விடுவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் 03

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 29/10/2024

## பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் நிலநடுக்கம்

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் வான்கூவார் தீவுகள் மற்றும் ஹய்டா காவி பகுதிகளில் 02



# விமர்சனங்கள் தொடர்பில் பிரதமர் ட்ரூடோ வருத்தம்

**கனடாவை சேர்ந்த சிலர் மிக அநாகரீகமான விமர்சனங்களை முன்வைக்கின்றனர் என கனடிய பிரதமர் வருத்தம் வெளியிட்டுள்ளனர்.**

**குறிப்பாக தமது குடும்பத்தை இழிவுபடுத்தும் வகையில் சில விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.**

இது சில சந்தர்ப்பங்களில் உணர்வுபூர்வமான பாதிப்புகளை ஏற்படுத்தும் என அவர் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு எதிராக கட்சிக்கு உள்ளேயும் பொது வெளியிலும் பல்வேறுபட்ட விமர்சனங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன்மை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் சில விமர்சனங்கள் அநாகரீகமானவை என அவர் சுட்டிக் காட்டி உள்ளார்.

எவ்வாறு எனினும் பொதுவாக கனடியர்கள் நாகரீகமானவர்கள் எனவும் பெரும்பான்மையானவர்கள் மிக நாகரீகமாக நடந்து கொள்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தம்மை மிக இழிவான வகையில் தரக்குறைவாக விமர்சனம் செய்யும் நபர்களுக்கு தமது விளக்கத்தை அளிப்பதற்கு விரும்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், எதிர்வரும் பொது தேர்தலில் லிபரல் கட்சியை வழிநடத்த திட்டமிட்டுள்ளதாக ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

# தலைசிறந்த நாடுகள் பட்டியலில் கனடாவுக்கு நான்காவது இடம்

அமெரிக்க ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலில் கனடாவுக்கு நான்காவது இடம் கொடுக்கப்பட்டுள்ளது.

U.S. News & World Report என்னும் அமெரிக்க ஊடகம் வெளி யிட்டுள்ள உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலில் கனடா நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

சாகசம், கலாச்சார தாக்கம், தொழில் முனைவு, பாரம்பரியம், தொழில் செய்ய வெளிப்படைத்தன்மை, ஆற்றல், வாழ்க்கைத்தரம் முதலான பல்வேறு காரணிகளின் அடிப்படையில் 73 நாடுகள் தரவரிசைப்படுத்தப்பட்டன.

அவ்வகையில் ஒவ்வொரு காரணிக்கும் புள்ளிகள் கொடுக்கப்பட, 94.1 புள்ளிகள் பெற்று கனடா பட்டியலில் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.



உலகின் தலைசிறந்த நாடுகள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ள நாடு சுவிட்சர்லாந்து. பட்டியலில் ஜப்பான் இரண்டாவது இடத்தையும், அமெரிக்கா மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.




# கனடாவின் நோவா ஸ்கோசியாவில் இடைத் தேர்தல் நடத்துமாறு கோரிக்கை




கனடாவின் நோவா ஸ்கோசியா மாகாணத்தில் இடைத் தேர்தல் நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முதல்வர் டீம் ஹுஸ்டன் இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளார். சட்டமன்றத்தை கலைத்து பொது தேர்தல் நடத்துமாறு டீம் ஹுஸ்டன் ஆளுநர் நாயகத்திடம் கோரிக்கை விடுத் துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 26 ஆம் திகதி நோவாஸ் கோசியாவில் பொது தேர்தல் நடத்தப்பட உள்ளது.

பொதுத் தேர்தலை இலக்கு வைத்து பிரதான கட்சிகள் அரசியல் பிரசாரங்களை ஆயத்தப்படுத்தி வருவதாக தெரி விக்கப்படுகிறது. மாகாண மக்கள் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு வாக்களிப்பில் பங்கேற்க வேண்டும் என அர சாங்கம் கோரியுள்ளது.

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

4.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியிருந்தது என தெரிவிக்கப்படுகின்றது.

கடல் மட்டத்திலிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

எவ்வாறெனினும், இந்த நிலநடுக்கம் நிலப்பரப்பில் பெருமளவில் உணரப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.






# டொரன்டோவில் நூலகங்களை ஏழு நாள்கள் திறந்திருக்க திட்டம்

பொது நூலகங்களை வாரத்தின் ஏழு நாள்களிலும் திறப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. நகர முதல்வர் ஒலிவியா சௌளவ் இது தொடர்பான திட்டத்தை முன்வைத்துள்ளார்.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அளவில் நகரின் 100 பொது நூலகங்கள் இவ்வாறு ஏழு நாள்களும் திறந்திருக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

டொரன்டோவில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

தற்பொழுது ஞாயிறு தினங்களில் பொது நூலகங்கள் மூடப்பட்டுள்ளன. எனினும் எதிர்காலத்தில் ஞாயிற்றுக் கிழமையும் பொது நூலகங்களை திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் சுமார் 81 வீதமான டொரன்டோ பிரஜைகள் பொது நூலகங்களை பயன்படுத்தி உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# எரிபொருளுக்கான வரி சலுகை நீடிப்பு



## ஒன்றாரியோ மாகாண அரசு நடவடிக்கை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் எரிபொருளுக்கான வரி சலுகையை நீடிப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி எரிபொருளுக்காக அறவீடு செய்யப்படும் 5.7 வீத வரி சலுகை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் நீடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் தலைமையிலான அரசாங்கம் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் கோடை காலம் வரையில் வரி சலுகை அமுலில் இருக்கும் என முதல்வர் போர்ட் அறிவித்துள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் இந்த வரி சலுகை நடைமுறையில் உள்ளது.

இந்த வரி சலுகையின் மூலம் மக்கள் பெருமளவு நன்மையை பெற்றுக்கொள்ள முடியும் என மாகாண அரசாங்கம் அறிவித்துள்ளது.